**தலைப்பு 164 – தென்பிராந்திய அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு – 164 – தென்பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதி அமைச்சின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 55.94 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வு காலப்பகுதி இறுதியளவில் இதில் ரூபா 39.04 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 16.90 மில்லியன் அதாவது 30.21 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபவை | 31.07 | 18.61 | 12.46 | 40.10 |
| மூலதனம் | 24.87 | 20.43 | 4.44 | 17.85 |
| மொத்தம் | 55.94 | 39.04 | 16.90 | 30.21 |

**2.2 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

தென்பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

செலவின மதிப்பீடு, செயலாற்றல் அறிக்கைகள் போன்ற தேவையான சான்றுகள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 18,000,000 கூட்டுத்தொகைக்குரிய 05 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.3.1 பாதீட்டு முரண்**

(அ) 17 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடு முறையாக பயன்படுத்தப்படாததால் நிதி ஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 51 சதவீதத்திலிருந்து 93 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

(ஆ) 19 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 7,500,000 நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டின் செலவினம் திசெம்பர் மாதத்தின் கணக்குப் பொழிப்புக்கள் மற்றும் குறைநிரப்பு கணக்குப் பொழிப்பு மூலம் 164 ஆம் தலைப்பின் கீழ் கணக்கீடு

செய்யப்பட்டிருந்தது. 165 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் மீண்டெழும் செலவினக் கொடுக்கல் வாங்கல்கள் ஒவ்வொரு செலவின தலைப்புகளிலும் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அல்லது காசேட்டின் செலவின விடயங்கள் சரியாக குறிப்பிடப்படாதிருந்தமையால் அச்செலவின விடயங்களில் மேற்படி செலவினக் கணக்கீட்டின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------------

தென்பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் டீ.ஜீ.எஸ்.ஏ – 04 மாதிரியின் பிரகாரம் மூலதன செலவின விடயங்கள் மூலம் ஆண்டினுள் நிலையான சொத்துக் கொள்வனவுகள் மற்றும் கட்டிட நிர்மாணங்கள் என்பவற்றின் மொத்த கூட்டுத்தொகை ரூபா 11,431,366 ஆக இருந்த போதிலும், நடைமுறையல்லாத அசைவு அறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பெறுமதியாக ரூபா 12,673,675 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது.

### 3.5 பயனற்ற செலவினம்

-------------------------------------

அமைச்சு 2015 செப்தம்பர் 21 ஆந் திகதி முதல் சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சுடன் இணைக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் அலுவலக வளவில் உள்ளக பகுதிகளை அமைத்தல், அலுவலக தளபாடங்களை கொள்வனவு செய்தல் மற்றும் மாதாந்த கட்டிட வாடகையாக மொத்தம் ரூபா 15,571,365 தொகையொன்று இணைக்கப்பட்டதன் பின்பும் 164 ஆம் தலைப்பினூடாக தென்பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டிற்குரிய காலப்பகுதிக்காக அமைச்சை பராமரித்துச் செல்வதற்காக மேலே குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 15 மில்லியனுக்கு மேற்பட்ட பணம் செலவிடப்பட்டிருந்த போதிலும், அது ஆக்கபூர்வமற்றதும் பயனற்றதுமான செலவினமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

------------------------------------------------------------------------------------------------------------------------

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 04 | 08 |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | 05 | 06 |
| (iii) | இரண்டாம் நிலை | 15 | - | 15 |
| (iv) | ஆரம்ப நிலை | 20 | 03 | 17 |
| | மொத்தம் | 58 | 12 | 46 |